மாத்தளை பிரதேச சபை - 2021

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மாத்தளைபிரதேச சபையின் 2021திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான மற்றும் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172(1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2021திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாத்தளைபிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(I)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் இடம்பெற்ற நிலப் பரிமாற்றத்தின் மூலம் பெற வேண்டிய முத்திரைத் தொகை வருமான ஆண்டின் முத்திரை வரி வருமானமாகக் கருதப்படும் என்று கணக்கீட்டுக் கொள்கையில்,குறிப்பிடப்பட்டிருந்த போதும் ரூபா 50,000,000 மதிப்பிடப்பட்ட முத்திரை வரி வருமானம் அந்த ஆண்டிற்கான முத்திரைத் தீர்வை வருமானமாகக் கணக்கிடப்பட்டது. மேலும், மீளாய்வாண்டில் முத்திரை வரி வருமானமாய் எதுவும் அறவிடப்படவில்லை. | பதிவாளர் அலுவலகங்களில் இருந்து மாதாந்த அறிக்கைகள் சமர்ப்பிக்காத காரணத்தால் மதிப்பிடப்பட்ட முத்திரை வரி வருமானம் இறுதிக் கணக்குகளில் சேர்க்கப்பட்டதாக | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பலாபத்வல தாய் மற்றும் சுகாதார சேவை நிலையத்தினதும் சமூக மண்டபத்தின் ரூபா 41,691,510 ஆன முடிவு வேலைகளின் பெறுமதி ரூபா 46,629,525 என மூலதனமாக்கப்பட்டமையால் நிலையான சொத்துக்களின் பெறுமதி ரூபா 4,938,015 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) மடவள பொது மலசலகூடத்தை நிர்மாணிப்பதற்காக முன்னைய ஆண்டின் போதும் மீளாய்வாண்டின் போதும் செலவிடப்பட்ட மொத்தம் ரூபா 2,945,520 தொகை மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஈ) ரூபா 90,000 பெறுமதியான 02 காணிப்பகுதிகள் காணி மற்றும் கட்டிடங்களின் கீழ் இரண்டு முறைற கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் நிலையான சொத்துக்கள் ரூபா 90,000 ஆல் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (உ) உள்ளூராட்சி மன்ற சேவைகள் ஓய்வூதிய பங்களிப்பு நிதியத்தின் மீதிகள் உறுதிப்படுத்தல் கடிதத்தின் பிரகாரம் முன்னைய ஆண்டுகளில் அந்நிதியத்திற்கு கூடுதலான கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததாக கருதி முன்கொண்டு வரப்பட்ட ரூபா 186,737 ஆன கடன்கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஊ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீர் பாவனையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 80,000 ஆன நீர்மானிக் கட்டணங்களை கடன்பட்டோரின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (எ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய ரூபா 389,605 ஆன விளம்பர பதாதை வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை | |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 55,243,576ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 59,915,854 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சபைக்குரிய செயலற்ற நிலைமையில் காணப்பட்ட 5 நீர் முன்மொழிவு முறைகளில் 6 ஆண்டு முதல் 11 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலவீச்சில் நிலுவையாக | பிணை வைப்புக்களிலிருந்தும் சட்டத்தின் மூலமும் நடவடிக்கை எடுத்து நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு | நிலுவை நீர்க் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இருந்த ரூபா 1,212,959 ஆன நீர் கட்டணங்கள் அறவிடப்படா திருந்ததுடன் நீர் வழங்கல் துண்டிக்கப்பட்ட 46 நீர் பாவனையாளர்களிடமிருந்து 2 ஆண்டுகள் முதல் 10 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலவீச்சில் நிலுவையாக இருந்த ரூபா 217,292 ஆன நீர் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை எடுப்பதாக | |
| (ஆ) | மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி பெறவேண்டிய முத்திரைக் கட்டணங்கள் ரூபா 2,933,000 ஆக இருந்தது . | முத்திரைக் கட்டணங்கள் தொடர்பாக பொறுப்பினை வகிக்கும் உத்தியோகத்தர்களுக்கு எழுத்துமூலமும் குறித்த நிறவனங்களுக்கு சென்று அறிக்கைகள் வழங்கப்பட்ட போதிலும் அப்பணத்தை சபைக்கு வழங்கப்படவில்லை. | நிலுவை முத்திரைக் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 2.2.2 **மிகை அறவீடு**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| பிரதேச சபை சட்டத்தின் பிரகாரம் பொறுப்பு வாய்ந்த தரப்பினருக்கு எதிராக என்னால் முன்னைய ஆண்டுகளின் போது விதிக்கப்பட்ட மிகை அறவீடுகளுக்குரிய 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,627,825 தொகை அறவிட வேண்டியிருந்தது. | உள்ளூராட்சி மன்ற திணைக்களத்தினால் வழக்கு தொடரப்பட்டு மிகை பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | பிரதேச சபை சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட்டு மிகை அறவீட்டினை அறவிட வேண்டும |

## 3. **செயற்பாட்டு மீளாய்வு**

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு 5 பெற வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 73,189,895 தொகை அறவிடப்படாதிருந்ததுடன் அதில் அறவிடப்படாமல் இருக்கும் காலம் 1 ஆண்டிற்கு குறைந்த மீதி ரூபா 68,840,206 ஆகவும் 1 ஆண்டிற்கு மேற்பட்ட 5 ஆண்டுகளுக்கு குறைந்த மீதி ரூபா 3,572,936 ஆகவும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதி ரூபா 776,753 என உள்ளடக்கப்பட்டிருந்தது. | நிலுவையை அறவிடுவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக | பெற வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.. |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய நிர்மாணக் கடன் கொடுத்தோர் மீதி ரூபா 15,178,079 தொகை தீர்வுசெய்யப்படாதிருந்ததுடன் அதில் தீர்வு செய்யாமல் இருக்கும் காலம் 1 ஆண்டிற்கு குறைந்த மீதி ரூபா 14,972,078 ஆகவும் 1 ஆண்டிற்கு மேற்பட்ட 5 ஆண்டுகளுக்கு குறைந்த மீதி ரூபா 206,001 ஆகவும் உள்ளடக்கப்பட்டிருந்தது | செலுத்த வேண்டிய மீதிகளை விரைவில் தீர்வுசெய்ய நடவடிக்கை எடுப்பதாக | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்வுசெய்ய வேண்டும். |

**3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அலுவலக, நூலக, பொது மலசலகூடம் மற்றும் மயானங்கள் போன்ற சபையின் வெவ்வேறு பணிகளுக்காக பயன்படுத்தப்படும் காணியனி அளவுகளை இனங்காத 38 காணிகளின் உரித்து கையேற்கப்பட்டிருக்கவில்லை. | இக்காணிகள் அரச காணியாக இருப்பதுடன் குறித்த நிறவனங்களிடமிருந்து கையளிக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. | காணிக்காக உறுதிகள் அல்லது கையளிப்பு கட்டளைகளை பெற்றுக்கொள்ள வேண்டும் |

3.3 **மனித வள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இடமாற்றம் பெற்றுச் சென்று 1 ஆண்டிற்கு 2 ½ ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலப்பகுதி கடந்திருந்த 4 உத்தியோகத்தர்களிடமிருந்தும் முன்னைய ஆண்டில் வேலையை விட்டுச்சென்ற | இடமாற்றம் பெற்றுச்சென்ற மற்றம் வந்த உத்தியோகத்தர்களின் மீதி தொடர்பாக இணக்கமின்மை காணப்படுவதாகவும் | நிலுவை கடன் மீதிகள் அறவிட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உத்தியோகத்தரிடமிருந்தும் இடர்கடன், விழா முற்பணம் மற்றும்விழா முற்பண மீதிகளின் மொத்தம் ரூபா 835,227 க் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | சேவையை விட்டுச்சென்ற உத்தியோகத்தரின் கடன் தொடர்பாக சட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுப்பதாகவும் | |
| (ஆ) | இடமாற்றம் பெற்று வந்த 2 ஆண்டுகளுக்கும் 2½ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலப்பகுதி கடந்திருந்த 7 உத்தியோகத்தர்களிடமிருந்து மொத்தம் ரூபா 1,400,841 ஆன இடர்கடன், விழா முற்பணம் மற்றும் விசேட முற்பண மீதிகள் தீர்வுசெய்யப்படாதிருந்ததுடன் அந்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட்ட மொத்தம் ரூபா 751,867 ஆன தவணைப் பணம் பொது வைப்புக் கணக்கில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. | இடமாற்றம் பெற்று வந்த 2 உத்தியோகத்தர்களிட மிருந்து கடன் மீதி தொடர்பாக பிரதான செயலாளரின் அறிக்கைகளில் இணக்கமின்மை காரணமாக இக்கடனை தீர்வுசெய்ய முடியாமல் இருந்தது. | அறவிடப்பட்ட கடன்களை சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |